# வாரப்பாடசாலை செயற்பாட்டுப் பத்திரம்
## தரம்-12

மேல்வரும் செய்யுள்களை வாசித்து அவற்றின் கீழுள்ள வினாக்களுக்கு விடையளிக்குக.

01. இளமைப் பாரார் வள நசைஇச் சென்றோர்
இவணும் வாரா ரெவண ரோவெனப்
பெயல்புறந் தந்த பூங்கொடி முல்லைத்
தொகுமுகை யிலங்கெயி றாக
நகுமே தோழி நறுந்தண் காரே

அ. இச்செய்யுளின் பொருளை இக்கால உரைநடையில் எழுதுக.

ஆ. தலைவியின் மனநிலை புலப்படுமாற்றை விளக்குக.

இ. இச்செய்யுளில் புலப்படும் சங்ககால அகத்திணை இலக்கிய பண்புகளை விளக்குக.

02. கன்றுதன் பயமுலை மாந்த முன்றிற்
றினைபிடி யுண்ணும் பெருங்கன் னாட
கெட்டிடத் துவந்த வுதவி கட்டில்
வீறுபெற்று மறந்த மன்னன் போல
நன்றிமறந் தமையா யாயின் மென்சீர்க்
கலிமயிற் கலாவத் தன்னவிவள்
ஒலீமென் கூந்த லுரியவா நினக்கே

அ. இப்பாடலின் துறையினை விளக்குக.

ஆ. இப்பாடலில் காணப்படும் அணிச்சிறப்பை விளக்குக.

இ. இப்பாடலில் புலப்படும் சங்ககால அகத்திணை மரபின் சிறப்பம்சங்கள் எவையெனக் குறிப்பிடுக.

03. **சிலப்பதிகாரம்** ஊர்காண் காதையில்

அ. கோவலனின் கழிவிரக்கக் கூற்றுககள்

ஆ. கவுந்தியடிகள் கோவலனுக்குக் கூறிய அறிவுரைகள்.

இ. ‘ஊழ்வினைப் பயன் விளைந்தே தீருமென்ற உண்மை’ ஆகியன கூறப்பட்டுள்ள விதத்தினை விளக்குக.

**04. அறிவுடைமை** என்ற அதிகாரத்தில் திருவள்ளுவர்
அ. அறிவினது சிறப்பு
ஆ. அறிவினது இலக்கணம்
இ. அறிவுடையாரது சிறப்பும் இல்லாரது இழிவும் கூறப்பட்டுள்ளவாற்றை விளக்குக.

# வாரப்பாடசாலை செயற்பாட்டுப் பத்திரம்

தரம்-12